**<u>தொழிலாளர் நீதிமன்றம், காஞ்சீபுரம்</u>**

**முன்னிலை.திருமதி.S.சுஜாதா, எம்.ஏ., எம்.எல்,**
**தலைமை தாங்கும் அலுவலர்,**
**காஞ்சீபுரம்.**

2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் நாள் வெள்ளிக்கிழமை

**தொழிற்தகராறு எண்.(I.D.) 309/2019**

P.ரோஸ், (தொ.எண். UP100112)
த/பெ. K.குப்புசாமி,
எண்.2, குயவர் தெரு,
ஸ்ரீபெரும்புதூர்,
காஞ்சிபுரம் மாவட்டம் - 602 105 ...... மனுதாரர் /தொழிலாளி

/எதிராக/

யூனிபிரஸ் இந்தியா பிரைவேட் லிமிடெட்,
RNS-6, சிப்காட் தொழிற் வளர்ச்சி மையம்,
ஒரகடம், வடக்குப்பட்டு அஞ்சல்,
ஸ்ரீபெரும்புதூர் தாலுக்கா,
காஞ்சிபுரம் மாவட்டம். ..... எதிர்மனுதாரர்/நிர்வாகம்

இந்த தொழிற்தகராறு வழக்கு கடந்த 04.10.2024 அன்று முதல்நிலை விசாரணைக்காக இந்நீதிமன்றத்தில் வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருவாளர்கள்.T.ராம்குமார், K.சுடலைகண்ணு, A.ரேகா மற்றும் M.சுரேஷ் ஆகியோர்கள் ஆஜராகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர்கள் திருமதி ராதிகா, திருமதி.மகாலட்சுமி மற்றும் திரு.B.P.மணிவேலன் ஆகியோர் ஆஜராகியும் நடத்தப்பட்ட முதல்நிலை விசாரணையில் ஆவணங்களை பரிசீலித்து இன்று நீதிமன்றம் வழங்கும்,

**<u>முதல் நிலை விசாரணைக்கான உத்தரவு</u>**

1. இந்த தொழிற்தகராறு வழக்கில் மனுதாரரை பணித்தொடர்ச்சி, பின்சம்பளம் மற்றும் இதர சலுகைகளுடன் மீண்டும் பணியில் அமர்த்திட எதிர்மனுதாரருக்கு உத்தரவிடுமாறு கேட்டு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **<u>மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள கோரிக்கை மனுவின் சுருக்கம்</u>**

மனுதாரர் எதிர்மனுதாரர் நிர்வாகத்தில் 02.02.2010 அன்று பயிற்சியாளராக சேர்ந்து 01.08.2013 தேதியில் ஸ்பாட் வெல்டராக பணி நிரந்தரம் செய்யப்பட்டுள்ளார். மனுதாரர் 9ஆம் வகுப்பு வரை படித்துள்ளார். ஸ்பாட் வெல்டிங் மற்றும்Co2 வெல்டிங்கில் சுமார் 8 ஆண்டுகள் எந்தவித குறைப்பாடும் இல்லாமல் பணி செய்து வந்தார். மேலும் 4 ஆண்டுகளுக்கு பிறகு நேர்காணல் மற்றும் சரிபார்ப்பு மூலமாக மனுதாரர் அளித்த ITI சான்றிதழ் போலியானது என கண்டறியப்பட்டது 02.09.2014 தேதியிட்ட குற்றச்சாட்டு குறிப்பாணை வழங்கப்பட்டது. அதற்கு மனுதாரர் 13.09.2014 தேதியிட்டு விளக்க கடிதத்தை அளித்துள்ளார். அதனை நிர்வாகத்தரப்பினர் ஏற்றுக்கொள்ளவில்லை. அதனால் எதிர்மனுதாரர் உள்துறை விசாரணை நடத்த திரு.சிங்பால் என்பவரை விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். விசாரணையில் மனுதாரர் நேர்காணலின் போது நிர்வாகத்தால் கூறப்படும் போலி ஆவணங்கள் எதையும் அளிக்கவில்லை என அறிவிக்கப்பட்டுள்ளது. வெல்டிங் பணியில் 6 ஆண்டுகள் பணியாற்றிய அனுபவம் மற்றும் நேர்முகத்தேர்வின் போது வெல்டிங் தேர்வை நடத்தி அவரது திறமையை மதிப்பீடு செய்ததன் அடிப்படையில் நிர்வாகத்தால் அவருக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட்டது மனித வள துறைதிருமதி. உமா நிறுவனத்தில் வேலை வாய்ப்பைப் பெற எதிர்மனுதாரரின் வழிகாட்டுதலின்படி பயோடேட்டாவை சமர்ப்பிக்க வேண்டும் என்று கோரினார். எனவே மனுதாரரின் தகுதி ஐ.டி.ஐ மற்றும் 10ம் வகுப்பு தேர்ச்சி என குறிப்பிட்டு பயோடேட்டாவை சமர்பித்தார். மனிதவள மேலாளரின் முன்மாதிரியால் வழங்கப்பட்ட தகவல் என்பதால், நியமனத்தின் போது எந்த ஆவணமும் சமர்ப்பிக்க வேண்டிய அவசியமில்லை.மேலும்

மனுதாரர் தகுதிக்கான எந்த ஆவணத்தையும் சமர்ப்பிக்கவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். மனுதாரர் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டுகள் உள்நோக்கம் கொண்டவை என்பதால் உள்துறை விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்களின்படி நிர்வாகத்தால் நடத்தப்படவில்லை நிர்வாகத்தால் தயாரிக்கப்பட்ட விண்ணப்பத்தின் மூலம் ஆவணத்தின் சமர்ப்பிப்பு நிரூபிக்கப்படவில்லை. ஆனால் விசாரணை அதிகாரி நிர்வாகத்திற்கு ஆதரவாக மட்டுமே சட்டப்பூர்வ அங்கீகாரம் இல்லாத ஒரு நிறுவனத்தின் அறிக்கையை ஏற்றுக்கொண்டார் மற்றும் மனுதாரர் குற்றச்சாட்டுகளின் அடிப்படையான ஆவணத்தை வழங்கியுள்ளார். மனுதாரரிடமிருந்து ஆவணங்களை பெற்றதாக கூறப்படும் சாட்சிகள் எவரும் விசாரணையில் விசாரிக்கப்படவில்லை. விசாரணை அதிகாரியின் விசாரணை ஒருதலைபட்சமாகவும் சட்டப்படி ஏற்கத்தக்கது அல்ல. நிர்வாகம் மனுதாரரின் தொழிற்சங்க நடவடிக்கைகளுக்காக மனுதாரருக்கு எதிராக பழி வாங்கும் நோக்கத்துடன் நிர்வாகத்தின் விண்ணபப்படிவத்தில் செய்யப்பட்ட உள்ளீடுகளை பயன்படுத்தி ஆவணங்களை தயாரித்துள்ளது . மனுதாரரை உறுப்பினராக தொடர்வதை தடுக்கவும், அவர் தொடர்ந்து யூனியனில் உறுப்பினராக இருந்தார் என்பதற்காக நிர்வாகம் மனுதாரர் மீது குற்றம் சாட்டப்பட்டு மனுதாரரை 07.01.2015 தேதியில் பணியிலிருந்து நீக்கம் செய்யப்பட்டுள்ளார். மனுதாரரை பணி நீக்கம் செய்தது மனுதாரர் தொழிற்சாலையின் தொழிலாளர்களை ஒரு தொழிற்சங்கத்தை உருவாக்கி ஊதிய திருத்தம் மற்றும் பிரச்சனைகளை நடத்துவதில் ஈடுபட்டதால் நிர்வாகம் மனுதாரரை பணி நீக்கம் செயயப்பட்டுள்ளார். பணி நீக்கத்தை எதிர்த்து மனுதாரர் உதவி தொழிலாளர் முன்பு மனு தாக்கல் செய்யப்பட்டு அதில் 23.08.2017சமரச முறிவறிக்கை அளிக்கப்பட்டுள்ளதால் மனுதாரர் மீண்டும் வேலை, பணி தொடர்ச்சியுடன் பின் சம்பளத்துடன் மற்றும் இதர பலன்களை அளிக்க வேண்டும் என்று வழக்கை தாக்கல் செய்துள்ளார்.

3. <u>எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள எதிர்வழக்குரையின் சுருக்கம்</u>

எதிர்மனுதாரர் மனுதாரர் பயிற்சியளராக சேர்ந்து போது விண்ணப்பத்தில் பூர்த்தி 10வது வகுப்பு தேர்ச்சி மற்றும் ஐ.டி.ஐ தொழிற்கல்வி தகுதி பெற்றவர் என்று

விண்ணப்பித்தன் அடிப்படையில் பயிற்சியாளராக நியமித்து பின் அவர் அளித்த சான்றுகளை நம்பி 01.08.2013 முதல் ஸ்பாட் வெல்டராக நியமிக்கப்பட்டார். மனுதாரர் மனிதவள நிர்வாகி திருமதி.உமாவிடம் தான் 9ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்றதாக குறிப்பிட்டதாக கூறியதாகவும் ஆனால் திருமதி உமா அவர்கள் தான் 10ம் வகுப்பு மற்றும் ஐடிஐ தேர்ச்சி பெற்றதாக விண்ணப்பத்தில் குறிப்பிட சொன்னதாக கூறுவது யாராலும் ஏற்க முடியாது. மனுதாரர் தனது தகுதி 9ம் வகுப்பு தேர்ச்சியையும், முந்தைய அனுபவத்தின் காரணமாக அவருக்கு வேலை கிடைத்ததாகவும், பயோடேட்டாவின் அடிப்படையில் நிர்வாகம் மனுதாரருக்கு வேலை வழங்கவில்லை என்று தெரிவித்துள்ளார். நிர்வாகம் நி.சா. ஆ.9 மற்றும் 10 முன்னிலைக்கு பணி நியமனம் செய்தது. மனுதாரர் 10ம் வகுப்பு மற்றும் ஐடிஐ தேர்ச்சி பெற்றதற்கான சான்றிதழ் தாக்கல் செய்யாமல் இருந்து இருந்தால் அவருடைய விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டிருக்கும் என்றும், மனிதவள நிர்வாகி திரு.உமாவின் அறிவுறுத்தலின் பேரில் தான் மனுதாரர் தவறான விவரங்களை சமர்ப்பிக்க நேரிட்டது என்பது ஏற்றுக்கொள்ளத்தக்கதல்ல. மனுதாரர் மீது சந்தேகத்திற்குரிய மற்றும் போலி சான்றிதழ் கொடுத்து ஏமாற்றுதலில் ஈடுபட்டு வேலை வாய்ப்பை பெறுவதற்காக உருவாக்கிய குற்றச்செயலுக்காக அவர் மீது உள்துறை விசாரணை அதிகாரியை நியமித்து சான்றளிக்கப்பட்ட வேலை வாய்ப்பு துறை ஆணையின்படி உள்துறை விசாரணைக்கு பிறகு மனுதாரருக்கு 02.09.2014 அன்று குற்றப்பத்திரிக்கை வழங்கி அதற்கு மனுதாரர் 13.09.2014 தேதியில் அளித்த விளக்கம் திருப்திகரமாக இல்லாததால் மனுதாரருக்கு போதிய வாய்ப்பு அளித்து விசாரணை நடத்தப்பட்டு விசாரணை அதிகாரி 24.11.2014 தேதியில் அளித்த விசாரணை உள்துறை விசாரணை அறிக்கை அடிப்படையில் இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு 11.12.2014 தேதியில் அனுப்பப்பட்டு அதற்கு மனுதாரர் 22.12.2014 தேதியில் அளித்த விளக்கம் எந்தவகையிலும் திருப்தி அளிக்காததால் முடிவறிக்கையின் அடிப்படையில் மனுதாரர் மீது சாட்டப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டதாக 07.01.2015 தேதியிட்ட உத்தரவின் மூலம் மனுதாரரைபணி நீக்கம் செய்யப்பட்டிருப்பதாகவும், அந்த வகையில் மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை முறையாகவும்,

சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடத்தப்பட்டது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

4. மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? என்று முதல்நிலை விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டுமென்று மனுதாரர் தரப்பில் கேட்டுக்கொண்டதன் பேரில் இந்த வழக்கில் முதல்நிலை விசாரணை மேற்கொள்ளப்பட்டதில் இருதரப்பிலும் வாய்மொழி சாட்சியம் அளிக்கப்படவில்லை. மனுதாரர் தரப்பில் தொ.சா.ஆ.1 முதல் 18 வரையிலான ஆவணங்கள் எதிர்மனுதாரர் தரப்பு சம்மதத்துடன் குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யப்படவில்லை.

5. **மனுதாரர் மீதான குற்றச்சாட்டுகளின் பேரில் நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதா? என்பதே தற்போதைய முதல்நிலை விசாரணை தீர்வுக்கான பிரச்சனையாகும்.**

6. இரு தரப்பும் கேட்கப்பட்டது. எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு 02.09.2014 தேதியிட்ட காரணம் கோரும் அறிவிப்பு தொ.சா.ஆ.5 அனுப்பியதை மனுதாரர் 05.09.2014 தேதியில் பெற்றுக்கொண்டுள்ளார். தொ.சா.ஆ.6 இரண்டாம் அறிவிப்பு 03.09.2014 தேதியில் மனுதாரருக்கு எதிர்மனுதாரர்/நிர்வாகம் அனுப்பப்பணுட்டதாகவும், 02.09.2014 தேதியிட்ட காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் கால அவகாசம் கோரி 08.09.2014 தேதியிட்ட கடிதம் நிர்வாகத்திற்கு அனுப்பியுள்ளார் அந்த கடிதம் தொ.சா.ஆ.7 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் தகுதிக்காக இரண்டாம் அங்கீகார சான்றிதழ் கேட்டு எழுதிய கடிதம் தொ.சா.ஆ.8 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அன்னை இந்திரா தொழிற்பயிற்சி மையம் எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு 09.09.2014 தேதியிட்டு எழுதிய கடிதத்தில் சான்றிதழ் சரிபார்ப்பிற்கு அனுப்பியதை சரிபார்த்ததில் 2002 ஆம் ஆண்டில் படித்தவர்களில் ரோஸ் என்ற பெயரில் யாரும் இல்லை என்றும், நிர்வாகம்

அனுப்பியுள்ள இணைப்பிலுள்ள சான்றிதழ் அன்னை இந்திரா தொழிற்பயற்சி மையத்தின் சான்றிதழ் மற்றும் கையொப்பம் இந்த பயிற்சி நிலையத்தின் முதல்வருடையது அல்ல என்றும் இந்த தொழிற்பயிற்சியில் படித்தற்காக கொடுத்தது இல்லை என்று தெரிவித்துள்ளார். இந்த கடிதம் தொ.சா.ஆ.9 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. 02.09.2014 தேதியிட்ட கடிதத்தை மனுதாரர் படித்துப்பார்த்துவிட்டு கையொப்பிடமிட மறுத்துவிட்டார். எனவே விளக்கம் கேட்டு அவருக்கு தபால் மூலம் அனுப்பி அதனை 05.09.2014 அன்று பெற்றுள்ளார். 02.09.2014 தேதியிட்ட நிர்வாகத்தின் கடிதத்திற்கு 13.09.2014 தேதியில் மனுதாரர் அளித்த விளக்க கடித தொ.சா.ஆ.10 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த விளக்கம் திருப்திகரமானதாக இல்லாததால் மனுதாரரின் மீதான குற்றச்சாட்டுகள் தொடர்பாக உள்துறை விசாரணை நடத்த நிர்வாகம் தீர்மானித்து 15.09.2017 தேதியிட்ட விசாரணை நோட்டீஸ் ஒன்று அன்றே அவருக்கு நேரடிடையாக சார்வு செய்த போது கையொப்பிட மறுத்துவிட்டார். அதனை தொடர்ந்து விசாரணை நோட்டீஸ் தபால் மூலம் அனுப்பப்பட்டு அதனை அவர் பெற்றுள்ளார். வழக்கறிஞர் திரு.சிங்பால் என்பவர் விசாரணை அதிகாரியாக நியமிக்கப்பட்டார். விசாரணை அதிகாரி நியமிக்கப்பட்டதற்கான உத்தரவின் நகலை மனுதாரருக்கு அளிக்கப்படவில்லை. விசாரணை அதிகாரி 23.09.2014 அன்று மதியம் 2.00 மணிக்கு விசாரணையை துவங்கினார். அன்றைய விசாரணையில் நிர்வாகப்பிரதிநிதியாக மனிதவள உதவி மேலாளர்.திரு.ஜெபஸ்டின் என்பவரும், குற்றம்சாட்டப்பட்டவரான மனுதாரரும் ஆஜரானார்கள். அன்றையதினமே மனுதாரருக்கு விசாரணை எவ்வாறு நடைபெறும் என்ற விதிமுறைகள் பற்றி விசாரணை அதிகாரி தெரிவித்துள்ளார். அன்று நடைபெற்ற விசாரணை நடவடிக்கை குறிப்பின் முதல் பக்கத்தில் ஆட்சேபனையுடன் பெற்றுக்கொள்கிறேன் என குறிப்பிட்டு தனது கையொப்பத்தை மனுதாரர் பதிவு செய்துள்ளார். மனுதாரருக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு அடுத்த விசாரணையில் சக ஊழியரை அழைத்து வர அனுமதியளித்து விசாரணை 07.10.2014 அன்று மாலை 4.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் திரு.ஜெபஸ்டின், மனுதாரர் மற்றும் சக ஊழியர் குப்பன் ஆகியோர் ஆஜரானார்கள். மனுதாரரிடம் சில கேள்விகள் கேட்கப்பட்டு

விசாரணை 15.10.2014 அன்று மாலை 3.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் திரு.ஜெபஸ்டின், மனுதாரர் மற்றும் சக ஊழியர் குப்பன் ஆகியோர் ஆஜராகி நிர்வாகத்தரப்பில் 5 ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டுள்ளது. நி.த.சா.1 ஆக கே. கே.ராஜரத்தினம் என்பவரை விசாரணையில் ஆஜர்படுத்தி விசாரிக்கப்பட்டது. அவரை மனுதாரர் குறுக்கு விசாரணை செய்ய கால அவகாசம் கேட்டதால் விசாரணை18.10.2014 அன்று காலை 11.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டது. அன்றைய தினம் மனுதாரர் நி.சா.1யை குறுக்குவிசாரணை செய்துள்ளார். குறுக்குவிசாரணையில் நி.சா.1 எனக்கு சம்மந்தப்படாத கேள்வி என்று தெரிவித்துள்ளார். நிர்வாகத்தரப்பு அடுத்த சாட்சியை விசாரிக்க அடுத்தகட்ட விசாரணை 27.10.2014 அன்று காலை 10.00 மணிக்கு ஒத்தி வைக்கப்பட்டுள்ளது. அன்றைய தின விசாரணையில் நி.சா.2 திருமதி.சபுருனிஷா என்பவர் விசாரிக்கப்பட்டுள்ளது. அவரை மனுதாரர் குறுக்கு விசாரணை செய்ய காலஅவகாசம் கேட்டுக்கொண்டதால் அவருக்கு வாய்ப்பளிக்கும் பொருட்டு 04.11.2014 தேதிக்கு விசாரணை ஒத்திவகைக்கப்பட்டுள்ளது. 04.11.2014 அன்றைய தினம் நி.சா.2யை மனுதாரர் குறுக்கு விசாரணை செய்துள்ளார். மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களின் விசாரணைக்காக 11.011.2014 அன்று காலை 9.00 மணிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரர் தனது தரப்பு சாட்சி மற்றும் ஆவணங்களை தாக்கல் செய்ய இரண்டு வார கால அவகாசம் தேவை என்று கேட்டதால் விசாரணை 17.11.2014 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. அன்றைய தினம் மனுதாரர் தனது எழுத்து மூல வாக்குமூலத்தை தொ.சா.ஆ.13 ஆக தாக்கல் செய்தார். குறுக்கு விசாரணைக்காக 21.11.2014 தேதிக்கு ஒத்திவைக்கப்பட்டு, அன்றைய தினம் மனுதாரரை நிர்வாகத்தரப்பு குறுக்கு விசாரணை செய்தார். மனுதாரரும் மற்றும் நிர்வாகமும் கேட்டுக்கொண்டதற்கிணங்க விசாரணை 21.11.2014 தேதியுடன் முடிக்கப்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கைகள் குறிப்புகள் நகல் அனைத்தும் மனுதாரருக்கு கொடுக்கப்பட்டுள்ளது. விசாரணை நடவடிக்கை குறிப்புகள் தொ.த.சா.ஆ.11 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. உள்விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு முரணாக நடைபெற்றது என்று ஆட்சேபித்து மனுதாரர் விசாரணை அதிகாரிக்கு அனுப்பிய கடிதம் தொ.சா.ஆ.12 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

விசாரணை அதிகாரி தன்னுடைய விசாரணையை முடித்துக்கொண்டு 24.11.2014 தேதியிட்டு தனது முடிவறிக்கை தொ.சா.ஆ.14 யை வழங்கியுள்ளார். முடிவறிக்கையின் அடிப்படையில் தொ.சா.ஆ.15 யை எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு அனுப்பப்பட்டுள்ளது. அதற்கான விளக்கத்தை மனுதாரர் அளித்துள்ளார். அந்த விளக்க கடிதம் தொ.சா.ஆ.16 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் அளித்த விளக்கம் திருப்தியில்லாததால் தொ.சா.ஆ17 பணி நீக்க ஆணை வழங்க்பபட்டுள்ளது. பணி நீக்க ஆணையை ஆட்சேபித்து எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு மனுதாரர் கடிதம் அனுப்பியுள்ளார். அந்த கடித நகல் தொ.சா.ஆ.18 ஆக தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. தொ.சா.ஆ.9யை பரிசீலிக்கையில் மனுதாரரின் கல்வி சான்றிதழில் உள்ள அன்னை இந்திரா தொழிற்பயிற்சி மையத்தில் மனுதாரர் படிக்கவில்லை என்றும் அந்த நிலையத்தால் சான்றிதழ் வழங்கப்படவில்லை என்றும் தெரியவருகின்றது. தொ.சா.ஆ.12 ல் மனுதாரரை நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்த போது மனுதாரர் தான் 9வகுப்பு வரை தான் படித்துள்ளதாக ஒப்புக்கொண்டுள்ளார். தான் ஐடிஐ படிக்கவில்லை. படித்ததாக சான்றிதழை அன்னை இந்திரா இண்டஸ்டிரியல் பயிற்சி மையத்திலிருந்து வாங்கி தரவில்லை என்று தெரிவித்துள்ளார். தொ.சா.ஆ.14ல் மனுதாரர் நிர்வாகத்தரப்பு குறுக்கு விசாரணையில் உமா மேடம் கூறியதின் அடிப்படையில் விண்ணப்ப படிவத்தில் ஐடிஐ படித்ததாகவும் 10ஆம் வகுப்பு தேர்ச்சியடைந்துள்ளதாக போட்டேன் என்று கூறியுள்ளார். 02.09.2014 தேதியிட்ட விளக்கம் கேட்டு அறிவிப்பில் குற்பிபட்டுள்ளவாறு தமிழ்நாடு தொழில் வேலை மாதிரி நிலை ஆணைகள் விதிகள் 1947ன் சட்டக்கூறு 16(c) ன்படி தொழிலளிப்பவரின் தொழில் மற்றும் சொத்துகள் தொடர்புடையவற்றில் நேர்மையில்லாமல் நடந்து கொள்வது மற்று சட்டக்கூறு 16(J) ன்படி ஒழுக்கத்திற்கு புறம்பான செயல்களில் ஈடுபடுவது ஆிகய மிகவும் ஒழுக்கமற்ற செயல்களை குற்றம் சாட்டப்பட்ட மனுதாரர் புரிந்துள்ளார் என்பது இந்த உள்துறை விசாரணையில்

நிர்வாகத்தினரால் தக்க ஆதாரத்துடன் சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

8. மேலும் விசாரணை நடவடிக்கை குறிப்புகளை பரிசீலிக்கையில் நிர்வாக பிரதிநிகளை குறுக்கு விசாரணை செய்வதற்கு மனுதாரருக்கு போதிய வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. மனுதாரரையும் நிர்வாகத்தரப்பில் குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. மனுதாரருடைய சக தொழிலாளியும் விசாரணையில் ஆஜராகியுள்ளார். விசாரணை அதிகாரி நியமனம் தொடர்பாக மனுதாரருக்கு அறிவிப்பு அனுப்பப்பட்டதாக நிர்வாக தரப்பில் ஆவணம் தாக்கல் செய்யப்படவில்லை என்றாலும் கூட, உள்துறை விசாரணையில் மனுதாரர் கலந்து கொண்டு இருப்பதன் காரணமாக அவருக்கு தகவல் கிடைக்கப்பெற்று உள்ளது என கருதப்படுகிறது. மேலும் தனக்கு விசாரணை அதிகாரி நியமனம் சம்மந்தமாக தகவல் எதுவும் தெரிவிக்கப்படவில்லை என்ற நிலையை மனுதாரரும் எடுக்கவில்லை.

9. மனுதாரருக்கு விசாரணை நடைமுறை குறித்த விளக்கம் விசாரணை அதிகாரியால் தெரிவிக்கப்பட்டது போலவே உள்துறை விசாரணை நடைபெற்றுள்ளது. உள்துறை விசாரணையில் விசாரிக்கப்பட்ட சாட்சிகள், தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் அடிப்படையிலும் மனுதாரர் அளித்த விளக்க கடிதங்கள் அடிப்படையிலும், உள்துறை விசாரணை இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டு நடத்தப்படவில்லை என்று மனுதாரர் தரப்பு கூறும் வாதம் ஏற்றுக்கொள்ளக்கூடிய வகையில் இல்லை. விசாரணை நடவடிக்கை குறித்து ஆவணங்களை பரிசீலித்த வகையில் மனுதாரருக்கு வாய்ப்பு வழங்கி முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் உள்துறை விசாரணை நடத்தப்பட்டுள்ளது.

எனவே மனுதாரர் மீது நடத்தப்பட்ட உள்துறை விசாரணை நடவடிக்கைகள் முறையாகவும், சட்டப்படியும், இயற்கை நீதி கோட்பாடுகளுக்கு உட்பட்டும் நடத்தப்பட்டுள்ளதாகவே இந்த முதல்நிலை விசாரணைக்கு தீர்வு காணப்படுகிறது.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு நேரில் உரைக்கப்பட்டு, கணினி மூலம் தட்டச்சு செய்ததை பிழை திருத்தம் செய்து இன்று 2024ம் ஆண்டு அக்டோபர் மாதம் 18ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

ஒம்/- S.சுஜாதா,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சிபுரம்.

**இரு தரப்பிலும் சாட்சி** - இல்லை.

**மனுதாரர்/தொழிலாளி தரப்பு சான்றாவணங்கள்**

| | | |
|---|---|---|
| தொ.சா.ஆ.1 | | மனுதாரர் அளித்ததாக உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட விண்ணப்ப படிவம் நகல். |
| தொ.சா.ஆ.2 | | மனுதாரர் அளித்ததாக உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட personal Data Form நகல். |
| தொ.சா.ஆ.3 | 01.08.2013 | எதிர்மனுதாரர் நிர்வாகம், மனுதாரரது பணியை நிரந்தரம் செய்த அளித்த உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட ஆணை நகல். |
| தொ.சா.ஆ.4 | 15.07.2014 | மனுதாரர் தொடர்பாக G4S Security Solutions அளித்ததாக உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட புகார் மற்றும் இணைப்புகள் |
| தொ.சா.ஆ.5 | 02.09.2014 | எதிர்மனுதாரர் நிர்வாகம் அளித்த விளக்கம் கேட்டு கடிதம் மற்றும் ஒப்புகை அட்டை நகல். |
| தொ.சா.ஆ.6 | 03.09.2014 | விளக்கம் கேட்டு கடிதத்தை வாங்க மறுத்ததாக குற்றம்சாட்டி மனுதாரருக்கு அளிக்கப்பட்ட எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் கடிதம் நகல். |
| தொ.சா.ஆ.7 | 08.09.2014 | காரணம் கோரும் அளிவிப்பிற்கு விளக்கம் அளித்த மனுதாரர் அளித்த கால அவகாசம் கோரும் கடித நகல். |

| | | |
|---|---|---|
| தொ.சா.ஆ.8 | 08.09.2014 | அன்னை இந்திரா தொழிற்பயிற்சி மைய முதல்வருக்கு எதிர்மனுதாரர் நிர்வாகம் அனுப்பியதாக உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட கடிதம் நகல். |
| தொ.சா.ஆ.9 | 09.09.2014 | எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு அன்னை இந்திரா தொழிற்பயிற்சி மையம் அனுப்பியதாக உள்விசாரணையில் தாக்கல் செய்யப்பட்ட கடிதம் நகல். |
| தொ.சா.ஆ.10 | 13.09.2014 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் 02.09.2014 தேதியிட்ட கடிதத்திற்கு மனுதாரர் அளித்த பதில் கடித நகல். |
| தொ.சா.ஆ.11 | 23.09.2014 முதல் 21.11.2014 | உள்விசாரணை நடவடிக்கை குறிப்புகள் நகல். |
| தொ.சா.ஆ.12 | 11.11.2014 | உள்விசாரணையை ஆட்சேபித்து விசாரணை அதிகாரிக்கு மனுதாரர் அளித்த ஆட்சேபனை கடித நகல். |
| தொ.சா.ஆ.13 | 17.11.2014 | உள்விசாரணையில் விசாரணை அதிகாரியிடம் மனுதாரர் தாக்கல் செய்த எழுத்து மூல வாக்குமூலம் நகல். |
| தொ.சா.ஆ.14 | 24.11.2014 | விசாரணை அதிகாரியின் உள்விசாரணை முடிவு அறிக்கை நகல். |
| தொ.சா.ஆ.15 | 11.12.2014 | எதிர்மனுதாரர் நிர்வாகம் வழங்கிய இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பு நகல். |
| தொ.சா.ஆ.16 | 22.12.2014 | இரண்டாம் காரணம் கோரும் அறிவிப்பிற்கு மனுதாரர் அளித்த விளக்க கடித நகல். |
| தொ.சா.ஆ.17 | 07.01.2015 | எதிர்மனுதாரர் நிர்வாகம் மனுதாரருக்கு வழங்கிய பணி நீக்க ஆணை மற்றும் மனுதாரர் பணி நீக்கத்திற்கு ஒப்புதல் கோரி எதிர்மனுதாரர் நிர்வாகம் தாக்கல் செய்த மனு நகல். |
| தொ.சா.ஆ.18 | 09.01.2015 | எதிர்மனுதாரர் நிர்வாகத்தின் பணி நீக்க ஆணையை ஆட்சேபித்து எதிர்மனுதாரர் நிர்வாகத்திற்கு மனுதாரர் அனுப்பிய கடிதம் நகல். |

**எதிர்மனுதாரர்/நிர்வாக தரப்பு சான்றாவணங்கள்** - இல்லை.

ஒம்/- S.சுஜாதா,
தலைமை தாங்கும் அலுவலர்,
தொழிலாளர் நீதிமன்றம்,
காஞ்சிபுரம்.